1982 மார்ச் 6]

சாத்தூரில் தொழில் முதலீட்டுக்கழகம் மூலம் தொழிற் பேட்டை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 382—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் சாத்தூரில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாக தொழிற்பேட்டை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

ஆ) ஆம், எனில், எப்போது அமைக்கப்படும் ?

(இ) அதன் மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ), (ஆ) மற்றும் (இ) : தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (T I I C) தொழில்களுக்கு நிதியுதவி மட்டும் வழங்கி வருகிறது. அந்நிறுவனம் தொழிற்பேட்டை (Industrial Estate) துவங்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே 1980 ஆம் ஆண்டு முகவை மாவட்டம் சாத்துரிலே சிட்கோ மூலமாக கட்டிடம் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்பட்டது ஆனால், மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இருப்பினும் சாத்தூர் வட்டத்திலே ஏதாவது, தொழில்களைத் துவங்குவதற்கு சிட்கோ மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு நெல்லை, முகவை மாவட்டங்களில் எந்தெந்த தாலுக்காக்களில் என்னென்ன தொழிற்பேட்டைகள் உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முகவை மாவட்டத்தில் தற்போது காரைக்குடி, சிவகங்கை, விருதுநகர் ஆகிய இடங்களில் அரசு தொழில் பேட்டைகளும், பரமக்குடியில் தமிழ்நாடு சிறுதொழில் அபிவிருத்தி நிறுவனம் தொழில் பேட்டையும், சிவகாசியில் கூட்டுறவு தொழில் பேட்டையும் உள்ளன. திருச்சுழி, மானாமதுரை, பரமக்குடி, சிவகங்கை, காரைக்குடி, வத்திராயிருப்பு, காரியாப்பட்டி ஆகிய இடங்களில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் டைனி செக்டார்—சிறுதொழில் கூடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் சிப்காட் நிறுவனத்தினுடைய சார்பாக மானாமதுரையில் ஏறத்தாழ 4 கோடி ரூபாய் முதலீட்டில் அங்கு தொழில்கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1982 மார்ச் 6

[முற்பகல் 9–10]

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மானாமதுரையில் கட்டப்பட்டிருப்பது போல, சாத்தூரில் அடுத்த ஆண்டு சிப்காட் மூலம் கட்டமுயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சாத்தூரை ஒட்டி கோவில்பட்டி, விருது நகர் ஆகிய இடங்களில் முன்பே தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல மானாமதுரையில் தொழிற்பேட்டை வளர்ந்த பிறகு, அடுத்து சாத்தூரினுடைய உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, இதுபோன்ற பிற்படுத்தப்பட்ட தாலுக்காக்களில் தொழிற் பேட்டைக்காக இடம் ஒதுக்குவதிலே—குறிப்பாக என்னுடைய தொகுதியிலே கப்பலூரிலே—இடம் ஒதுக்கியும் பல ஆண்டுகளாக இன்னும் தொழிற்சாலைகள் தொடங்கப்படவில்லை. அதற்கான உண்மையான இடர்ப்பாடுகளை அறிந்து, அதைக் களைந்து விரைவாக அந்தத் திட்டத்தைத் தொடங்க அரசாங்கம் திட்டமிடுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மானா மதுரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற அந்த சிப்காட் தொழில் மையத்திற்கு ,அலுவலகக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், வேலை கூடங்கள் 4 கோடி ரூபாயில் கட்டப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே அதிகமாக தொழில் முனைவர்கள் (என்டர்பிரைசஸ்) வராததற்குக் காரணம், அதிகாரிகள் ஒத்துழைப்பு இல்லாததா அல்லது அந்தப் பகுதிக்கேற்ற தொழில்கள் இன்னின்ன என்று அறிவிக்காததா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மானாமதுரையிலே தொழில் முனைவர்கள் வரவில்லை என்று கருத்து முழுமையானது அல்ல. மானாமதுரை தொழிற்பேட்டையில் 61.90 ஏக்கர் பட்டாநிலம், 381 ஏக்கர்கள் புறம்போக்கு நிலம் உள்ள இடத்தில் ஒதுக்கப்பட்டு இதுவரையில் 363 ஏககர் நிலத்தில் உள்ள 137 மனைகளில் 29.77 ஏக்கர் நிலத்தில் 6 தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டு அந்தப்,

பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எதிர் காலத்திலே வர இருக்கின்ற முனைவர்களுக்கும் தக்க வசதியை செய்து தர அரசு இருக்கிறது என்பதனை தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 383, 384, 385 ஆகிய வினாக்கள் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்பட்டுள்ளன.

1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட பாப்பாப்பட்டி கிராம விவசாய நிலங்கள்.

*வினா எண் 386— திரு. ரா. பெரியசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், தாத்தையங்கார் பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த பாப்பாப்பட்டி கிராமத்தில உள்ள சுமார் 100 ஏக்கர் நிலமும், 30 விவசாயக் கிணறுகளும், 1977 ஆம் ஆண்டு புயலினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப் பட்டு மேற்படி நிலங்களும், கிணறுகளும் மணல் மேடாக குவிந்து விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம் எனில், ஆற்றில் இரு கரைகளையும், விவசாய நிலங்களையும், கிணறுகளையும் செப்பனிட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : 1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் இக்கிராமத்தி லுள்ள நிலங்கள் யாவும் பெரிதும் பாதிக்கப்படவில்லை. பாதிக் கப்பட்ட நிலங்கள் மற்றும் கிணறுகள் நிலச் சொந்தக்காரர் களால் சீர்திருத்தம் செய்யப்பட்டு, சாகுபடியும் செய்யப்பட்டு வருகிறது. பாண்டவ நதியின் கரையை மட்டும் உடைப்பை செப்ப னிட்டால் போதும் எனவும், இதற்கு நிவாரணம் தேவையில்லை எனவும் நிலச் சொந்தக்காரர்கள் தெரிவித்ததால் மேற்படி மராமத்துபணி பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப் பட்டது. இருந்தாலும் இந்த வெள்ளத் தடுப்பை நிரந்தரமாக தடுக்கும் வகையில் பாண்டவ நதியின் கரையை பலப்படுத்த ரூபாய் 5.26 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தலைமைப் பொறியாளரின் (நீர்ப்பாசனம்) பரிசீலனையில் உள் ளது.